
# குறுநெல்

## குறும்பாக்கள்



ஆர்.எம்.நௌஸாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுநெல்

*(குறும் பாக்கள்.)*

'தீரன்.' ஆர்.எம். நௌஸாத்

கல்முனை பாவலர் பண்ணை வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஏனைய பிரதிகள்.*

- வல்லமை தாராயோ...(சிறுகதைத் தொகுதி-2000)

- நட்டுமை (நாவல்-2009)
(தமிழ் நாடு காலச்சுவடு இதழ் நடத்திய
சு.ரா. நினைவு நாவல் போட்டியில் முதற் பரிசு பெற்றது)

- வெள்ளி விரல்...(சிறு கதைகள-2011)
(2011 இன் இலங்கை அரசின் சாஹித்திய விருது பெற்றது)

- கொல்வதெழுதுதல்.90 (நாவல்-2013)
(தமிழக அரசின் ஆயிரம் பிரதிகளுக்கான அரச ஆணை பெற்றது)

- அபாயா-என் கறுப்பு வானம் (கவிதைகள்.-2014)
(மின்நூல் - பிரதிலிபி வெளியீடு)

- அழித்தாயே.. ஆழித்தாயே...(சுனாமி கடற்கோள் காவியம்.
முதற்பதிப்பு-2004-இரண்டாம் பதிப்பு- 2017)


*kuru nel*

kurumpaa- Poems

By; *Theeran*. R.M. Nawshaad- - Tp : 0714457593.185/2 Old Market Road-

Sainthamaruthu-01--rmnawshad@gmail.com--- தீரனவெளி.theeran1959blogspot.com--

facebook-தீரன்.ஆர்.எம்.நௌஷாத்.-- Published by: 'KALMUNAI PAAVALAR PANNAI'

rmnawshad@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

கொக்கூர்கிழான். கா.வை. இரத்தினசிங்கம்.

ஐயா அவர்களுக்கு..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்பால் எறிந்த குறுவாள்கள்..

1977களில் அல்அசுமத்தின் 'பூபாளம்' சஞ்சிகை, 'தமிழகத்துப் பத்திரிகைச் சந்தை' என்ற கூற்றடியைத் தந்து ஒரு குறும்பாப் போட்டியை அறிவித்தது.. குறும்பாவின் விதிமுறைகள் பற்றிய எவ்வித இலக்கண அறிவும் இன்றி அதன் வடிவமைப்பை மட்டும் வைத்து நானும் இப்போட்டிக்கு ஒரு குறும்பாவை (?) அனுப்பி வைத்தேன்.. .."தமிழையே கொன்றிடுமவ் விந்தை- தவறாது நடந்திடினும் மந்தைத்-தமிழ்வாசகர்கள்-தவழ்கின்ற இடம்தானே..-தமிழகத்துப் பத்திரிகைச் சந்தை..' என்ற குறும்பா அது.. இதிலுள்ள இலக்கண வழுக்களைத் திருத்தி அதைப் பிரசுரம் செய்திருந்தார் பூபாளம் ஆசிரியர். இது ஒரு பெரிய உற்சாகமாக இருந்தது எனக்கு.

1980களில் என் தமிழ்க்குரு கொக்கூர்கிழான் கா.வை. இரத்தினசிங்கம் ஐயா அவர்களுடனான தொடர்பு ஏற்பட்டதன் பின்தான் அன்னாரிடமிருந்து குறும்பா பற்றிய அடிப்படை இலக்கண விதிகளையும், 'வடிவமைப்பாளர்' மகாகவி உருத்திரமூர்த்தி அவர்களைப் பற்றியும் அறிய முடிந்தது.. குறும்பா என்னும் குறுவாளை முறைப்படி சுழற்றக் கற்றுக் கொடுத்தார் கொக்கூர்கிழான் ஐயா அவர்கள். மேலும் பல தேடல்களின் போது, எஸ்.பொ., சில்லையூர் செல்வராசன், ஜவாத் மரைக்கார், எம்.எச்.எம். ஷம்ஸ், போன்றோரின் குறும்பாக்கள் மீதான கனிசமான பங்களிப்புகளை கண்டு வியந்தேன்...

அன்று தொடக்கம் குறும்பாக்களின் குறும்புத்தனத்திலும் அவை வெளிப்படுத்தும் நகையுணர்விலும், அதீத சமுக உணர்விலும் ஒரு அலாதி ஈடுபாடு உண்டாயிற்று. இந்த உற்சாகத்தில் அச்சமயம் வெளியான பல சஞ்சிகைகள்-தினசரிகளில் ஏராளமாக குறும்பாக்களை எழுதிவந்தேன்.. இலங்கை வானொலி முஸ்லிம் சேவை வானொலி நாடகம் ஒன்றினை முழுக்க முழுக்க குறும்பாவிலேயே எழுதியிருந்தேன். 'காதிக்கோர்டு" என்ற இந்நாடகத்துக்கு ஒரு தாளுக்கு 15 பாக்களாக 16-17 பக்கங்களில் சுமார் 250க்கும் மேற்பட்ட குறும்பாக்களை எழுதியிருந்தேன். 1982களில் நான் நடத்தி வந்த 'தூது' கவிதைச் சஞ்சிகையிலும் ஆசிரியர் தலையங்கங்களையும் குறும்பா வடிவத்தில் எழுதிவந்தேன். இப்படி அந்தக் காலத்தில் ஒரு 'குறும்பாப் பைத்தியம்' இலக்கிய வீதிகளில் அலைந்து கொண்டிருந்தது.. பின்னர் புதுக்கவிதை-சிறுகதை-நாவல் போன்ற வேறு துறைகளில் என் கவனம் திருப்பப்பட்டதால் குறும்பாக் காய்ச்சல் கொஞ்சம் தெளிந்துவிட்டது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் 2000களின் பின் இணையம் அறிமுகமானதன் பின் சிற்சில தளங்களில் தமிழகத்தில் எழுதப்படும் குறும்பாக்கள் என்று சிலவற்றைப் பார்த்தேன்.. அவற்றில் குறும்பா என்று நாம் நம்நாட்டில் காணுகின்ற சட்டகத்திலும், சட்டத்திலும் அமையாது குறும்-பாக்களாக சிலர் எழுதியிருந்தனர்.. ஹைக்கூ கவிதைகளையும், மூன்று, நான்கடி வரிகள் கொண்ட புதுக்கவிதைகளையும் கூட குறும்-பாக்களாக தலைப்பிட்டிருந்தனர். அபூர்வமாக ஒருசில தமிழக கவிஞர்கள் நமது விதிகளைப் பின்பற்றியும் எழுதியிருந்தனர்..

இதனால் ஏற்பட்ட 'அருட்டுணர்வு' காரணமாக மீண்டும் குறும்பாக்கள் சில எழுதி ஒன்றுக்கும் அனுப்பாது என் வலைத்தளத்தில் பதிவேற்றிக் கொண்டிருந்தேன்.. இவற்றை 2013வாக்கில் எஸ்ஆர். தனபாலசிங்கத்தின் 'நீங்களும் எழுதலாம்' சஞ்சிகைக்கு அனுப்பி பிரசுரமாயின.. இக்காலத்தில் முகநூல் கணக்கு ஒன்றை ஆரம்பித்திருந்தேன். முகநூலில் பதிவுகள் இட குறும்பா ஒரு நல்ல வடிவம் என்பதைக் கண்டுகொண்டேன்.. மீண்டும் என் குறும்பா பயணம் முகநூலில் தொடர்ந்தது... முகநூல் நண்பர்களும் மிக இரசித்து பின்னூட்டங்கள் இட்டிருந்தனர்.

இக்காலப் பகுதியில் குறும்பாவின் இலக்கண விதிகள் நமது பொறுமையை அதிகம் சோதிப்பதாகவும், காய்-காய்-தேமா தேடுவதிலும், கனிச்சீர்-விளச்சீர் தவிர்ப்பதிலும் நமது படைப்புநேரத்தை அது அதிகம் விழுங்குவதாகவும், இருக்கிறது என உணர்ந்தேன்... முகநூலில் விரைவிலேயே பதிவேற்றி விட்டு விலக முடியவில்லை...அதிநவீன கணினித்தமிழை சட்டென்று பிரயோகிக்கவும் முடியவில்லை..

இச்சமயம், பாவேந்தல் பாலமுனை பாறுக், ஏ.பீர்முகம்மது சேர் போன்றோரும் குறும்பாவின் சட்டங்கள் மீறப்படவும் அதன் சட்டகங்கள் விரிவாக்கப்படவும் கூடியன என்ற வகையில் ஒரு புதிய போக்கை கையாளத் தொடங்கினர்.. கருத்துகளும் கூறிவந்தனர். ஒலுவில் கவிஞர். வஹாப்தீனும், எஸ்.ஜலால்டீனும் குறும்பா விதிகளையிட்டு அதிகம் கவலைப்படாமல் இரு குறும்பாக் கவிதைத் தொகுதிகளை வெளியிட்டிருந்தனர்.

இதுகூடச் சரிதான் என்று நானும் குறும்பாவுக்கான சட்ட-சட்டகங்களை சற்று விலக்கிக் கொண்டும், உள்நின்றும் இதுவரை காலமும் எழுதிய நூற்றுக் கணக்கான பாக்களில் சகட்டுமேனிக்கு ஒருசில குறும்பாக்களை 'குறு-நெல்'லாக விதைத்துவிட்டுக் காத்திருக்கிறேன். விளைச்சலுக்காக....

*இக்குறும்பாக் களினரசன் தீரன்*
*இருக்கின்றேன் சாய்ந்தமரு துாரன்*
*இத்தொப்பி யார்க்கெல்லாம்*
*இணக்கமானால் அணிந்திடுக*
*இதற்குமேல் பேச்சில்லை வாரன்.*

*o*

**தீரன். ஆர். எம். நௌஸாத்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைகள்

தொலைபேசி அலுவலகத்தில் அப்பா
தொலைக்காட்சி நாடகத்தில் அம்மா
தொலைதூரத்தில் அண்ணா
தொலைநகல் காரனுடன்
தொலைந்து போனாள் மகள் யம்மா.

ஓட்டோ

ரோட்டெல்லாம் ஓடுகின்ற ஓட்டோ
ராமுழுக்கச் சத்தம்தான் கேட்டோ
ரம்பமெனக் காதுகளில்
ரொம்பத்தான் அறுத்தாலும்
ரேட்டெல்லாம் குறைந்திடவே மாட்டா..

சீனி-யர்

சீனி கொழுப்பு பிரசர் கூட
சீனியப்பா கையில்ஊசி போட
சீக்கிரமே போய்விட்டால்
சிறந்ததடா எனச் சொல்லி
சின்னவீடு சென்றார் ஆட..

யுத்தம் நித்தம்

இறுதியாய் ஓய்ந்தது யுத்தம்
இல்லை துப்பாக்கிச் சத்தம்
இனிநிம்மதியே என்றெண்ண-
இந்நாட்டில் வாழ உமக்கு
இடமில்லை என்றார் தேரர் பௌத்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டு

சுனாமியினால் விழுந்தசவம் கண்டார்
செய்ய வந்தார் புனிதமிகு தொண்டார்
சவக்குழிகள் தோண்டியவர்
சவம் புதைக்கும் போதந்தச்
செவி கழுத்து நகையுருவிக் கொண்டார்.

குறுஞ்செய்-தீ

எஸ்எம்எஸ் அனுப்புகிறாள் பாட்டி
எட்டிப் பார்த்தான் பேரன் சூட்டி
எதிர்வீட்டுக் கிழவருக்காம்
எத்திவைத்தான் பாட்டனிடம்
எழுபது வயதில் மணவிலக்கு நோட்டீஸ்.

புகழ்ச்சி

இனத்திற்காய் புரிந்த நற் சேவை
இருக்கையில் புகழ்வதுவே தேவை
இருக்கையில் மறந்தே போய்
இறந்தபின் புகழ்வோர்சிலர்
இழுத்துப் பிடுங்குஅவர் நாவை.

வாழ்-கை

வாழும்போதே வாழ்த்துவதே நன்மை
வேண்டுமெனச் சொல்லுகிறோம் உண்மை
வாழ்கையில் மறந்துவிட்டு
வாழ்ந்தபின்னே சிலை வைத்தே
வணங்குதலை எதிர்த்திடுவோம் வன்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெம்பர்

கிணற்றுத் தவளையவர் துள்ளி
கணக்கின்றி செலவழித்தார் அள்ளி
காசுபணம்.. ஆயினுமவர்க்கு
கிடைத்தது ஏழு வோட்டு
கந்தறுந்து போய்ப்படுத்தார் எள்ளி

அன்பு அளிப்பு

அமைச்சில் செயலாளர் உள்ளார்
அகடம் செய்வதில் வல்லார்
அவருக்கு அன்பளிப்பு
அகலமான என்வலப்பு
அளித்தால் எக்காரியமும் வெல்வார்.

புண்ணியப் பயணம்.

புரட்டிப் பணம் சேர்த்து வெச்சு
புண்ணியம். புறப்பட்டார் ஹஜ்ஜ-
பணமிருந்தால் ஹாஜியாராம்
பிணமானால் நேரே சொர்க்கமாம்
பத்துக்குமர் பக்கத்து வீடோ குச்சு.

ஏகமும் நானே

தமிழரின் ஏகதலைவன் நானே
தரணியெலாம் தனிஆளாய் தானே
தமிழரசு ஆள்வேனென்று
தலைக்கணம் தழைத்ததால்
தமிழீழப்போர் போனது வீணே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு-பட்டு.

கனடாவாழ் காதலருக்கும் பாட்டு
கண்டறியா நேயருக்கும் கேட்டு
கலகலவென கதைத்திருப்பார்
கலையுலக நண்பர்களாம்
காசுகரையுது கடனுக்கு ரீ லோட்டு.

எம்பி எம்பி

தேர்தலில் குதித்தார் எம்பி
தேனொழுகப் பேசினார் தம்பி
தேர்தலில் வென்று
தேவைப்பட்டதைச் சுருட்டி
தேசம்விட்டு நீட்டினார் கம்பி.

நடுநிசிநாய்கள்

நக்குத் தின்னும் நாய்கள்
நக்கல் பின்னும் வாய்கள்
நல்லவராய் நடித்து
நண்பரை நயவஞ்சிப்பர்
நரகலைத் தின்னும் பேய்கள்..

பெப்பே

கன்னிக்கும் சேர்த்தெடுத்தார் டிக்கற்
காசென்று பாராமல் யொக்கற்
கன்னி பக்கத்தமர்ந்து வரக்
கனவு..கடைசி நிமிடம்
காக்காவுடன் வந்தமர்ந்தாள் பெப்பற்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானக்கண்ணி

விழிவீசினாயே விஞ்ஞானக் கண்ணி
வெடிவைத்தழித்தாயுன் கண்ணில்
விழியீர்ப்பு விசையில் நான்
விழுந்தேன் மின் வலையில்
வழியின்றி அழிந்தேன் இம் மண்ணில்

## கலாபூஷணம்

கலைவிருதுக்கு தெண்டித்தார் மும்முறை
கலாபூஷண விருதுபெற்றார் இம்முறை
கலையறியா நீ பெற்றதெப்படி
காதோடுசொல் என்றேன்
காசுக்கு என்றார் இதுகலை வன்முறை.

## தேசியப்பட்டியல்

ஒவ்வொரு ஊரும் இருக்குது அதையே நம்பி
ஒவ்வொரு உயர்பீடமும் தலைவருக்குக் கொம்பி
ஓடித் திரியுதுகள் ஓலமிடுதுகள்
உமக்குத்தான் என்று தலைவர்
உரையாற்றி முடிய. உறவினர் ஆயினார் எம்பி

## பிக்குமக்கு

குர்ஆனைத்தடை செய்யனுமாம் பிக்கு
கூறுகிறான் குர்—ஆன் ஓதாத மக்கு
குர்—ஆனைப் பாதுகாப்பது
குவலயம் படைத்தோன் பொறுப்பு
கொள்ளாதே நீ எள்ளளவும் சக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டா-டாட்டா

மகள் பள்ளிக்குச் செல்ல ஆட்டா
மகள் ரியுசனுக்குப் போகவும் ஆட்டா
மாதமிரண்டு கழிந்திட
முச்சக்கரச் சாரதியுடன்
மகள் காட்டி மறைந்தாள் டாட்டா..

மர்மப் புகழ்

இவ்விலக்கிய இதழ்தான் சூப்பர்
இன்சொற் புகல்வார் டாப்பர்
இதிலொரு விஷயம்
இவ்விதழில் இவர்கவிதை
இருக்கிறதே..அதுதான் பார் பேப்பர்.

ஊடகங்கள்;

ஊடகங்களில்தான் எத்தனை சேட்டை
உதவாக்கரை களின்புளுகு மூட்டை
உன்னதமான கருத்தில்லை
உயர் நல் எண்ணமில்லை
உதவாது வீச வேண்டும் சாட்டை

எ.... டிட்டர்

பெண்களின் கவிதைதான் சுப்பர்
பெண்ணியல் கவிஞர் இந்த மப்பர்
புத்திரிகையிற் போட்டுடன்
பஸ்ஏறித் தேடிப்போய்
பல்லிளிக்கும் பேர்வழி எ டிட்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலானார்
புத்தகச்சுச் செலவுஒரு பக்கம்
பிரதியனுப்பிய தொகைமறு பக்கம்
பிரதிகள் ஓசியில் போக
பிரட்டி எடுக்க வழியின்றிப்
போனது கைமோதிரம் ரொக்கம்.

கொள்ளி
இலக்சனில் குதிக்கின்றார் துள்ளி
இலட்சங்கள் வீசி வாக்குகள் அள்ளி
இனி–யார் காலிலும் விழுந்து
எம்பிக் குதித்து எம்பியாகி
இவர் வைப்பார் சமுகத்துக்குக் கொள்ளி.

நல்லாட்சி
எந்தக் கட்சி ஏறிடும் பீடம் ஆட்சி
அந்தக்கட்சியில் மாறும் காட்சி
எக்கேடு கெட்டாலும்
எவர்தாலி அறுத்தாலும்
எம்பிஆவதே எங்களவர் மாட்சி

ஹர்த்தால்.
மனிதர் சகலருமறிக இத்தால்
மாதத்தில் நான்கைந்து ஹர்த்தால்
மண்சமரில் இறந்தாலே
மறுயுகமது பிறந்தாலே
மண்ணில்லை மானுடம் போர்ப் பித்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுமலை

மண்ணாசை வெறுத்த புத்தர்
மானுடம் போதித்த சித்தர்
மாதவன் சொல்லவில்லை
மதவெறி பிடித்தவர்
மலையிலேற்றி வைத்தார் பித்தர்.

பல்லிமிட்டாய்

பார்ப்பதற்குப் பளபளக்கும் பல்லி முட்டை
போலிருக்கும் பலவர்ணம் பல்லி மிட்டாய்
பல்லிருப்போருக்கு பரவசம் தரும்
பள்ளிக் காலம் நினைவில் வரும்
பள்ளித் தோழி பகிர்ந்தபல்லி முட்டாய்

ஓவியம்

எண்ணத்தில் தோய்த்தெடுத்தாள் தூரிகை
என்னையே வரைந்தாள் இக் காரிகை
எண்ணங்கள் இதயத்தில்
வண்ணங்கள் ஆகிடும்
என்னவள் என்றே கொட்டும் பேரிகை.

கெ(ா)த்து

டகர டகர டக்கு டக்குக் கொத்து
கொத்துறவன் பார் என்னா கெத்து
ஊத்த உடுப்பும் உப்பும்
வேர்த்த கையும் வெக்கையும்
சேர்த்துத் தின்போம் மிகச் சத்து.?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை

காவி மொட்டை பஸ் ஒன்றில் ஏறி
கடிந்தார் நான் குரு என்று கூறி
குருமாருக்கு மட்டுமதில்
குந்தி வந்த முடவனெழ
கருணை அமர்ந்தார் தம்மம் மீறி.

துர்-அதிர்ஷ்டம்

விழுமென்றே நம்பியொரு கோடி
விழுந்தெடுத்தார் லொத்தரைத்தான் நாடி
விழவில்லை ஒருநாளும்
விழாதென்று கிழித்து வீசி
விட்டடெறிந்ததில் இருந்ததிரு கோடி

ஒரு(க்)கால்??

சீற்றின் கீழ் தன்கால் விட்டார்
சீற்றின் முன் பெண்கால் தொட்டார்
சோக்காகத் தடவிவிட்டார்
சேருமிடம் வந்தபின்னே
செயற்கைக்கால்– மிரண்டு விட்டார்.

மரி-யல்

விற்க வந்தாள் ஒரு சிறுமி யீடு
வந்தவளைத் தனியறைக்குள் விட்டு
வளர்த்தாட்டி விளையாடி
வம்புசெய்தார் கிழட்டப்பா
விளக்கமறியலில் கிழவன் மாட்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசி

எத்தனையோ புத்தகங்கள் போட்டேன்
எவர்தலை கட்டி காசு சேர்த்தேன்
எவரேனும் நூலொன்று
எழுதியுள்ளேன் எடுங்களென்றால்
என்பணமீந்து வாங்க மாட்டேன்.

ஆ..! வேஷம்

தாடிஜிப்பா தலைப்பாகை தொப்பி
ஆடையெல்லாம் அத்தர் அப்பி
தங்கியிருந்தார் பள்ளித்
தொண்டு செய்தொரு நாள்
உண்டியலுடன் போனது ஆள் தப்பி

இணை-யம்

பிள்ளைக்குப் படிக்க இன்டர் நெட்டு
பூட்டினர் கொம்பியுற்றர் கடன் பட்டு
பேஸ்புக்கில் சட்டடித்து
பாஸ்போட்டும் முடித்தெடுத்து
பறந்தாள் பெற்றோரைக் கை விட்டு.

கிறீஸ்மேன்

எங்கிலுமே கிறீஸ்மேன்தான் பேச்சு
எல்லோரும் வீடடங்க லாச்சு
எத்தனிவன் ஏகலைவன்
ஏறிக் கூரைபிரித்து
எடுத்துச் சென்றான் கோழி போச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூது வரும்

புதிதாயொரு புரட்சி துளிர் விட்டு
பூத்துவருகிறது புதுப் பெய ரீட்டு
புல்புல்கள் வான்மேவி
பரல்நெருப்பு நாகாவி
போராடத் தாம்வரும் புறப் பட்டு

எவ்வினத்திலும் ஒற்றுமைச் சேர்வு
ஏற்படவேண்டுமொரு புதுத் தீர்வு
ஏட்டிலக்கியம் செழித்திடவும்
எக்கலையும் வளர்ந்திடவும்
எழுதிடல் வேண்டும் ஐக்கியத் தேர்வு

நிச்சயமாக புலரும் புதுக் காலை
நற்கவிமழை பொழிந்திடவெடு கோலை
நாளைய யுகவிடியல்
நமதென்றே கோஷித்து
நீட்டிடுவோம் எழுதியொரு ஓலை.

துப்பாக்கியைப் பேனாவாய் மாற்று
ஒற்றுமையை அதற்குள்ளே ஊற்று
துர்ப்பாக்கியம் ஒழிந்தோட
தூயதமிழ்க் கவிதையெழுதி
தூது வரும் என்றுலகில் சாற்று?

*(தூது– கவியிதழின் ஆசிரியர் தலையங்கம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு யுத்தம்.

வட-கிழக்கில் நாள்தோறும் குண்டு
விழுமுயிர்க்கு ஒரு கணக்கா உண்டு
விடுதலைப் புலி சுடும் வேட்டை
விழுங்கிவிடும் நாட்டை
வெளியேறுமா அமைதிப்படை என்று..?

தென்திசையிலும் துப்பாக்கி வேட்டு
திணறாதா மானுடமது கேட்டு?
திசையெல்லாம் ரத்தம் பார்
திரும்புமிடம் சத்தம் வீர்.
துட்டகைமுனுக்கும் உரிமைப் பாட்டு

தினந்தோறும் துப்பாக்கிச் சத்தம்
தீநரகில் மானுடங்கள் தத்தம்
தீய்ந்துவிடும் உயிருடமை
திரும்பாதா சமாதானம்
தீராதா உள்நாட்டு யுத்தம்?

ஓற்றுமையாயப் பேச்சொலிக்கும் காலை
ஒருகுண்டு வெடித்திடுமோர் மூலை
ஒப்பமிட்டோர் ஓடியொழிய
ஒருகணத்தில் குழம்பிவிடும்
ஓலமிட்டழும் மனமெல்லாம் பாலை

*(தூது-(08)- கவியிதழின் ஆசிரியர் தலையங்கம்- 1988)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி-எம்பி.

காலியானது பதவி ஒன்று எம்பி
கேள்விப்பட்டதிலிருந்து நம்ம தம்பி
கொடுப்புக்குள் சிரிக்கின்றான்
கொழும்புக்கு ஓடுகிறான்
கிடைக்காவிட்டால் குந்தி அழுவான் வெம்பி

தலைவர் வீட்டுக்குப் பறக்கின்றான் தும்பி
தனக்குத்தான் தருவார் என நம்பி
தலைவரைத் தெரியாதா
தொண்டருக்கும் தெரியாமல்
தக்க தருணத்தில் தருவார் நல்ல கம்பி

சுயசரிதை

எத்தனையோ புத்தகங்கள் போட்டார்
எழுத்தாளராம் சிரிக்கவே மாட்டார்
என்கதை–சுயசரிதை
எழுதிமுடித்து எழுந்து பார்க்க
எவன்கூடவோ மனைவி போய்ட்டாள்.

தமிழ்ச் சேவை

அழியாவிலக்கியங்கள்தான் தேவை
அருந்தமிழுக்காற்றும் நற் சேவை
ஆக்கவிலக்கியக்காரரா்
அகிலப்புகழ் பெற்றுயர
அரைக்கக் கூடாதரைத்த மாவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்.எம். கொலைவரிசை

ஹெலோ நான்தான் சூப்பர் எப்எம்
ஹல்லோவ் உங்கள் குரலோ செப்பம்
ஹீஹீஹீ நலமாண்ணா..?
ஹாய்.. சாப்பிட்டீங்களாம்மா..
ஹீ..ஹீ..அடிச்சேன்னா ரெண்டு அப்பம்.

யார்யாக்கெல்லாம் வேணும் பாட்டு
யாரெல்லாம் இருக்கிறீங்க கேட்டு
யாபேரின் பெயர்சொல்லி
யார்க்கணக்கில் வெறுப்பேற்றி
யூரோவில் கரையுது ரீ லோட்டு

சேர் உங்க குரல் நம்பர் வண்ணு
சீ..ய்..புகழ்ந்தால் பட்டுவிடும் கண்ணு
செல்லமாய்ச் சிணுங்காதீங்கோ
சிரிக்காதீங்கோ கணவர்
செவியில் விழுந்தால் வாயில் மண்ணு

எஸ்பிபி. பாட்டொன்று கேட்டேன்
ஏஆர்ரஹ்மான் மியுசிக் போட்டேன்.
என்குரலா அவர்குரலா
எவரதுமக் குப்பிடிக்கும்
ஏய்..சீய்.. அதை நான் சொல்ல மாட்டேன்.

ஊடகத்தில்தானித்தனை சேட்டை
உதவாது.. விளாசவேண்டும் சாட்டை
உன்னதமாம் கருத்துக்கள்
உயிர்உருகும் இசைபற்றி
உறவாடிப்பகிர்ந்திடுவோம் பாட்டை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்கம்-பேஸ்

பேஸ் புக்கில் வந்தான் ஒரு அப்பு
பதிவெல்லாம் பார்த்தால் ஒரே மப்பு
பதில் கொடுத்தால் விழிக்கின்றான்
பதறுகிறான்.. முகத்தில்தான்
பளாரென அறைந்தால் என்ன தப்பு?

நீதி..?

நிம்மதியாய் வாழத்தான் ஆசை
நீதியிப்போ என்னவிலை வீசை
நேர்மைகள் செத்துப்போய்
நம்பிக்கை அற்றுப் போய்
நிலைக்காதா ஐக்கியமணி ஓசை..?

தலைக்-கவி

தமைமிஞ்சிய கவிஞர்கள் இல்லை
தாமே தமிழிலக்கிய எல்லை
தகுதியுடன் நினைப்பவரும்
தருவதுவோ மிகச் சொத்தை
திண்ணமிது நம் வெறுப்பின் எல்லை.

தீ-ரன்

இக்குறும்பாக் கவிஞரசன் தீரன்
இருக்கின்றேன் சாய்ந்தமரு தூரன்
இத்தொப்பி யார்க்கெல்லாம்
இணக்கமானால் அணிந்திடுக
இதற்குமேல் பேச்சில்லை வாரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Premium Graphics & Printers : 074 0069 589*